[1981 மார்ச் 2

அவர்கள் சுவாசிக்கின்ற காற்றினால் டி.பி. நோய் ஏற்படுகிறது. ஆகவே, அவர்களுக்குக் குறைந்தபட்சக் கூலி நிர்ணயம் செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவரவர்களே, தனிக் கேள்வி போடும்படி கேட்டுக்கொள்கிறேன்.

காவேரிப்பாக்கம் ஏரியினைத் தூர் எடுத்தல்.

*வினா எண். 333—திரு. சி. கோபால் : மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) வட ஆற்காடு மாவட்டத்தில் உள்ள தூர்ந்துவரும் காவேரிப்பாக்கம் ஏரியினால் விவசாயம் பாதிக்கப்படுவதை அரசு அறியுமா ?

(ஆ) ஏரியை தூர் எடுக்கும் திட்டம் இந்த அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : (அ) காவேரிப்பாக்கம் ஏரியில் தற்சமயம் 13 அடி ஆழத்திற்கு மண் தூர்ந்து உள்ளதால் ஏரியின் முழு அளவிற்குந் தண்ணீர் தேக்க இயலவில்லை. எனவே, இவ்வேரியின் கீழ் பதிவு செய்யப்பட்ட பாசனப் பரப்பு முழுமையாக பாசனம் பெற முடியவில்லை.

(ஆ) இந்த ஏரியின் முழு மட்ட நீர் அளவை ஆறு அங்குலம் உயர்த்தி ஏரியின் இழந்த கொள்ளளவை ஈடு செய்ய ஒரு திட்டம் தயாரிக்கப்பட்டு தல் அதிகாரிகளின் பரிசீலனையில் உள்ளது.

திரு. சி. கோபால் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வட ஆற்காடு மாவட்டத்திலே காவேரிப்பாக்கம் ஏரி மிகப் பெரிய ஏரியாகும். தற்பொழுது வட ஆற்காடு மாவட்டத்திலே வறட்சி நிலைமை பரவிக் கொண்டிருக்கிறது. இந்தக் காவேரிப்பாக்கம் ஏரியின் கீழே ஏறக்குறைய 16,000 ஏக்கர் பாசன வசதி பெறுகின்றன. விவசாயத்தை மட்டும் நம்பியிருக்கும் கூலி விவசாயப் பெருமக்கள் ஏற்கெனவே நிலவும் வறட்சி நிலை காரணமாக, கிராமங்களைவிட்டு நகரங்களுக்கு நகரும் நிலைமை இருக்கிறது. ஆகவே, அந்தத் திட்டத்தை உடனடியாகச் செயல்படுத்த அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவர் அவர்களே, இப்பொழுது நிலவுகின்ற வறட்சி நிலையைக் கருத்திலே கொண்டு தூர் வாருகின்ற பணி, மற்றும் கரையை உயர்த்து

1981 மார்ச் 2]

கின்ற பணிகளை விரைவுபடுத்த வேண்டுமென்று அரசு உத்தர விட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுகிற அந்த ஏரியினுடைய பணிகளும் விரைவாக எடுத்துக்கொள்ளப்படும்.

திரு. பாபு ஜனார்த்தனன் : பேரவைத் தலைவர் அவர்களே, வட ஆற்காடு மாவட்டத்திலே காவேரிப்பாக்கம் ஏரியை விட பெரிய ஏரியாகக் கருதப்படுகிற மாமண்டூர் ஏரியும் வறட்சியால் பாதிக்கப்பட்டு, அதே போல், வட ஆற்காடு மாவட்டத்தில் உள்ள பெரிய ஏரிகளும் வறட்சியால் பாதிக்கப்பட்டிருப்பதால், இந்த நேரத்தில் தூர் எடுக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவர் அவர்களே, பொதுவாகவே, நான் ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். இந்த வறட்சி நிலையைக் கருத்திலே கொண்டு, இப்பொழுது தூர் வாருவதற்கு வாய்ப்பு இருக்கிற காரணத்தாலே, இந்தப் பணியை விரைவுபடுத்த வேண்டுமென்று, அதன்மூலமாகக் கிராம மக்களுக்கு வேலை வாய்ப்பு கொடுக்க வேண்டுமென்று அரசு துரித நடவடிக்கையிலே ஈடுபட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. இல. பலராமன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, வட ஆற்காடு மாவட்டத்தில் இருக்கக்கூடிய அனைத்து ஏரிகளும் ஒரு சில ஏரிகளைத் தவிர, மலையிலிருந்து வரக்கூடிய தண்ணீர் உடையதாக இருப்பதனால், 3 மாதப் பாசன ஏரியாக இருந்தாலும், 1 மாதங்கூட பாசன ஏரியாக இல்லாமல் இருப்பதால், எல்லா ஏரிகளையும் அரசு பரிசீலித்து, அதற்கென தனித் திட்டம் வகுத்து, வட ஆற்காடு மாவட்டத்தை வளமுள்ள மாவட்டமாக ஆக்க, அரசிடம் ஏதாவது செயற்குறிப்பு உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவர் அவர்களே, பொதுவாக வறட்சியில்லாத காலத்தில், வட ஆற்காடு மாவட்டத்திலுள்ள பல ஏரிகள், பாலாறு நீரைப் பெறக்கூடிய ஏரிகள், மழையிலே நீர் பெற்று நிரம்பியிருக்கக்கூடிய ஏரிகள், இவைகளையெல்லாம் மண் தூர்ந்திருந்தாலும், தூர் எடுக்க வாய்ப்புகள் கிடைப்பதில்லை. ஆனால், தற்பொழுது எதிர்பாராத வறட்சி நிலவுகின்ற காரணத்தாலே, முடிந்த அளவு எதிர்காலத்திலே, எந்த அளவு கொள்ளளவு இருக்க வேண்டுமோ, அந்த அளவோடு இருக்க, அந்தப் பணிகளை மேற்கொள்ள வேண்டுமென்று அரசு முடிவு செய்து தகுந்த நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருக்கிறது.

TRUTH ALONE TRIUMPHS

திரு. எஸ். ஏ பூங்காவனம் : தலைவர் அவர்களே, வட ஆற்காடு மாவட்டத்தில் கடும் வறட்சி ஒரு பக்கம் இருந்தாலும், அங்கேயுள்ள குடிநீர் வாரிய அதிகாரிகள், கிணற்றிலே தண்ணீர் இல்லையென்று சொன்னாலும், தூர் எடுக்கக் கூடாது என்று ஆர்டர் பிறப்பித்திருக்கிறார்களே, இது அரசுக்குத் தெரியுமா? அந்தக் கிணறுகளில் தூர் எடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது : தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போடும்படி கேட்டுக்கொள்கிறேன்.

ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் பாசனத் திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்ட தொகை.

*வினா எண். 334—திரு. மி. வின்சென்ட் : மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) 6-ஆவது ஐந்தாண்டுத் திட்டத்தில் நீர்ப்பாசனத்திற்கு ஒதுக்கப்பட்ட தொகை எவ்வளவு?

(ஆ) இதில் வெள்ளத் தடுப்பு கடலரிப்பு போன்றவைகளுக்கு எவ்வளவு ஒதுக்கப்படும்?

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது : (அ) மத்திய திட்டக்குழு 6-ஆவது ஐந்தாண்டுத் திட்டத்தில் (1980–85) தமிழ் நாட்டின் பெரிய மற்றும் நடுத்தர பாசனத் திட்டங்களுக்கு, ரூபாய் 14,979 இலட்சம், சிறிய பாசனத் திட்டங்களுக்கு ரூபாய் 2,750 இலட்சம் மொத்த ஒதுக்கீடு செய்ய ஒப்புதல் அளித்துள்ளது.

(ஆ) வெள்ளத் தடுப்புத் திட்டங்கள் மற்றும் கடலரிப்புத் தடுப்புத் திட்டங்களுக்கு ரூபாய் 2,800 இலட்சம் மொத்த ஒதுக்கீடு செய்ய மத்திய திட்டக்குழு ஒப்புதல் அளித்துள்ளது.

திரு. மி. வின்சென்ட் : பேரவைத் தலைவர் அவர்களே, நீர்ப்பாசனங்களுக்கு மாநில அரசு எவ்வளவு கோரியது? திட்டக்குழு ஆய்வுக்குப் பின் எவ்வளவு ஒதுக்கீடு செய்தது என்பதை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் பெரிய, மற்றும் நடுத்தர பாசனத் திட்டங்களுக்காக மாநில அரசு கோரியிருந்த தொகை, ரூபாய் 16,946 இலட்சம்